
# AIDS

# எயிட்ஸ் இல்லா ஓர் புது சந்ததியை நோக்கி.......




உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் AIDS ஐ விளங்கிக் கொண்டு அதனைத் தவிர்ப்பதற்கும், HIV/AIDS உடன் வாழும் மக்களைப் பராமரிப்பதற்கான ஓர் வழிகாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சற்றே சிந்தித்துப் பாருங்கள்!
இன்று தொடக்கம் இலங்கையில்
உள்ள ஒவ்வொரு மக்களும் தேவனின்
திட்டத்தின் படியான திருமணம்,
குடும்பஉறவுமுறைகள் போன்றவற்றின்
படி வாழத்தொடங்குவார்களாயின்.....,

அது எத்தகைய பிரகாசமாயிருக்கும்!
"எயிட்ஸ் நோய் சில
வருடங்களுக்குள் மறைந்துவிடும்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கும் உங்கள்
குடும்பத்திற்கும்
AIDSஐ விளங்கிக் கொண்டு
அதனைத் தவிர்ப்பதற்க்கு
HIV/AIDS
உடன் வாழும் மக்களைப்
பராமரிப்பதற்கான
ஓர் வழிகாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AIDS என்றால் என்ன?

# Acqurired - பெற்றுக்கொண்ட

அதாவது நீங்கள் இந்நோயை மற்றவர்களிடமிருந்து பெறுவீர்கள் என்பதைக்குறிக்கும்.

# Immune - நோய்த்தடுப்பு

அதாவது பாதுகாக்கப்படுதல் அல்லது காப்பாற்றப்படுதலைக் குறிக்கும்.

# Deficiency - பற்றாக்குறை

அதாவது இருக்கவேண்டியதிலும் பார்க்க குறைவுபட்ட நிலையைக் குறிக்கும்.

# Syndrom - அறிகுறி

அதாவது ஒரு தொகுதி அடையாளங்களையும் அறிகுறிகளையும் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# AIDS என்பது HIV என்று அழைக்கப்படும் ஒரு நுண்கிருமியால் உருவாகின்றது.

Hiv என்றால் என்ன?

## Human – மனித

இவ்வைரஸ் கிருமி மனிதர்களில் மட்டுமே உயிர்வாழுமேயன்றி மிருகங்களிலோ பூச்சி இனங்களிலோ உயிர்வாழமாட்டாது.

## Immune – நோய் எதிர்ப்புச்சக்தி
## Deficiency குறைபாடு

எமது நோயெதிர்ப்பு தொகுதியானது (எமது உடலின் பாதுகாப்பு) அதன் செயற்திறன் இருக்கவேண்டியதிலும் பார்க்க குறைவாக செயற்படும் படிக்கு இந்த வைரஸ் ஆக்கிவிடுகின்றது.

## Virus – நுண்ணங்கி

வைரஸ் என்பது ஒரு நுண்கிருமியாகும்.

ஒரு வாக்கியத்தின் முடிவில் காணப்படும் முற்றுப்புள்ளியில் 230, 000 வைரஸ் கிருமிகள் காணப்படக்கூடிய அளவிற்கு மிகவும் சிறியது. ஒரு தரம் எச்.ஐ.வி கிருமியானது இரத்தத்தினுள் சென்றால் அதனைத் திரும்பவும் வெளியே எடுக்க முடியாது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் எதிர்ப்புத்தொகுதியானது எங்கள் உடலை தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்கின்றது.



நோயெதிர்ப்புத் தொகுதியானது சரீரத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கெனப் போராடும் ஒரு உள்ளமைக்கப்பட்ட பொறிமுறைகளில் ஒன்றாக ஒவ்வொரு நபரிலும் காணப்படுகின்றது. இது, வீட்டுக்குள் இருந்து சகல இயற்கை அனர்த்தங்களிலும் இருந்து பாதுகாக்கப்படுவதினைப்போன்றது. இப்பொறிமுறை தான் நோயெதிர்ப்புத் தொகுதி என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AIDS செயல்படுவது எப்படி?

# நோய் எதிர்ப்புத்தொகுதியானது HIV வைரஸின் மூலம் அத்துமீறி பிரவேசிக்கப்படுகின்றது.




## நோய்த் தொற்றுக்குள்ளான நபர்

1. அறிகுறிகள் எதையும் காட்டமாட்டார்.
2. சுகதேகியாகக் காணப்படுவார்.
3. வைரஸின் காவியாகக் காணப்படுவார் (HIV Positive)
4. AIDS இனை மற்றவர்களுக்கு பரப்பக்கூடியவர்
5. 2-10 வருடங்களுக்கு ஆரோக்கியமாக இருக்கக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தின்
## பின்பு ........




### எயிட்ஸ் முற்றாக பரவியதன் பின்

1. வைரஸின் எண்ணிக்கை அதிகரிக்கும்.
2. நோய் எதிர்ப்புத்தொகுதி அழிக்கப்பட்டிருக்கும்.
3. தீவிரமான நோய்களை விருத்தியாக்குவார்.
4. இவர் எயிட்ஸ் நோயாளியாக மாறுவார்.
5. இவர் இறுதியாய் மரணமடைவார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AIDS எவ்வாறு பரவுகின்றது?

AIDS
பரவுவது
எப்படி?

## 1 **AIDS** நோயாளியுடன் பாலுறவு கொள்வதன் மூலம்.

எயிட்ஸ் உள்ள மக்களில் 10 இல் 9 பேர் எயிட்ஸ் நோயாளியுடன் பாலுறவு கொண்டதாலேயே அதைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.



## 2 நோயுற்ற தாயிலிருந்து பிறவாத சிசுவுக்கு அல்லது புதிதாகப் பிறந்த குழந்தைக்கு.

நோயால் பீடிக்கப்பட்ட தாய்மாருக்கு பிறக்கும் எல்லா குழந்தைகளும் எயிட்ஸ் இருக்குமென்றில்லை. எயிட்ஸினால் பீடிக்கப்பட்ட தாய்மாருக்கு பிறக்கும் குழந்தைகளில் 10 இல் 3 குழந்தைகளுக்கு எயிட்ஸ் இருக்கும். இவ்வைரஸானது கருப்பையிலிருக்கும்போதோ அல்லது பிள்ளைப்பேற்றின் போதோ அல்லது தாய்ப்பாலின் மூலமோ ஊடுகடத்தப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 3 நோயுற்ற ஒருவரின் குருதியூடாக


எயிட்ஸ்
பரவுவது
எப்படி?



**a** குருதி மாற்றீடு
(இரத்த தானம்)



**b** ஊசி வகைகளை
உட்செலுத்துவதன் மூலம்



**c** தோலை வெட்டும் அல்லது
துளையிடும்
உபகரணங்களினூடாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எயிட்ஸ் பின்வரும் வழிகளில் பரவாது ........

AIDS
எப்படி
பரவாது?



a) நுளம்புக்கடி.

b) கை குலுக்குவதன் மூலம்.



c) சாதாரன தொடுகை



d) பாத்திரங்கள், கோப்பைகள், கழிவறைகள், குளியலறை போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ளுதல் மூலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களில் எவர்கள் HIV நோயுடன் வாழ்கின்றார்கள் என நீர் நினைக்கிறீர்?

யாருக்கு எயிட்ஸ உண்டு?



HIV நோயின் வெளிப்படையான அறிகுறி அல்லது அடையாளம் தெரியாமலேயே பல HIV காவிகள் இருத்தல் சாத்தியமாகும். தங்களுக்கு HIV வைரஸ் இருப்பது பற்றி அவர்களே அறிந்து இருக்க மாட்டார்கள். எயிட்ஸ் நோயை ஒருவரின் வெளித்தோற்றத்தின் மூலம் கண்டு பிடிக்க முடியாது பாதிப்புற்ற மக்களுள் 10 இல் 9 பேருக்கு தமது உடலில் HIV இருப்பது தெரியாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவருக்கு AIDS இருப்பதற்கான அறிகுறிகள்:

நபர் ஒருவருக்கு AIDS என்பதற்கான அறிகுறிகள் எவை?

## பெரியளவிலான அறிகுறிகள்

1. காய்ச்சல்(ஒரு மாதத்திற்கு கூடுதலாக).






2. நிறைகுறைதல் (உடல் நிறையின் 10%).



3. வயிற்றோட்டம் (ஒரு மாதத்திற்கு அதிகமாக).





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு அறிகுறிகள்

நபர் ஒருவருக்கு AIDS இருப்பதற்கான அறிகுறிகள் எவை?

4 காச நோய்(எயிட்ஸினால் பீடிக்கப்பட்டவர்களில் 30-50% மக்களுக்கு காச நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது ).

5 வாய் மற்றும் தொண்டை பகுதிகளில் நோய் பீடித்தல் (80 - 100% எயிட்ஸ் நோயாளிகளிடம் உள்ளது).

6 தோல் அரிப்பு/ சொறி.

7 இருமல்.

8 வாயிலோ, அந்தரங்கஉறுப்புக்களிலோ அல்லது உடலின் ஒரு பகுதியிலோ கொப்புளச்சொரசொரப்பு உண்டாகும். (ஹேர்பீஸ், ஷிங்கில்ஸ் என அழைப்பர்)

9 கழுத்து, கமக்கட்டு மற்றும் தொடை இடுக்குகளில் கட்டிகள் காணப்படுவது.(வீங்கிய நிணநீர் சுரப்பிகள்)

10 புற்றுநோய்க்கட்டிகள்.

11 நரம்பு மற்றும் மூளையில் பாதிப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ் நோயை தவிர்க்கும் வழிகள்


AIDS நோயை நான் எப்படி தவிர்ப்பது?

1

திருமணத்திற்கு முன் உடலுறவு வேண்டாம். திருமணத்துக்கு புறம்பான உடலுறவுகளும் வேண்டாம்.



2



பரிசோதிக்கப்பட்டு (சல்லடை செய்யப்பட்டு) HIV இல்லாத பாதுகாப்பான இரத்தம் என உறுதிப்படுத்தப்பட்ட பின்பு தான் உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்துக்கோ இரத்த மாற்றுகையை மேற்கொள்ள வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AIDS நோயை தவிர்க்கும் வழிகள்

AIDS
நோயை
நான்
எப்படி
தவிர்ப்பது?

3

ஊசிகள், அல்லது
உறிஞ்சற் குழாய்கள்
போன்றவற்றைப்
பகிர்ந்திட வேண்டாம்.



4

சவரக்கத்தி மற்றும்
தோலை வெட்டவோ
துளையிடவோ பயன்படும்
ஆயுதங்களைப்
பகிர்ந்திட வேண்டாம்
(நகம் வெட்ட அல்லது விருத்த சேதனம்
செய்யவோ இன அடையாளங்கள் இடவோ
அல்லது சிகை அலங்காரத்துக்கோ
இவற்றைப் பகிர்ந்திட வேண்டாம்)



5

AIDS குறித்து
பயமிருப்பின் அல்லது
திருமணம் செய்யத்
திட்டமிட்டிருப்பின் தகுந்த
ஆலோசகருடன்
கலந்துரையாடுவதுடன்,
HIVயும் சோதித்துக்
கொள்ளுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AIDS
நோயை
நான்
எப்படி
தவிர்ப்பது?

## 6 HIV இனைக் காவும் பெண் ஒருவர் கர்ப்பம் தரிக்க முயற்சிக்கக் கூடாது.

தற்செயலாக கர்ப்பம் தரிப்பின் மருத்துவ உதவியினை நாட வேண்டும். சில மருத்துவ நிலையங்களில் சிசுவிற்கு எயிட்ஸ் பரவாது தவிர்க்கும் தடுப்பு மருத்துகள் உண்டு.



## 7 அபாயகரமான நடத்தையை விளைவிக்குமாதலால் போதை வஸ்துக்கள் மற்றும் மதுபானம் ஆகியவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# HIV/AIDS உள்ள ஒருவரை வீட்டில் கவனித்தல்

நான் AIDS நோயாளி ஒருவரை பராமரித்துக் வருகிறேனாயின் எவ்வாறு செயல்ப்பட வேண்டும்?

HIV இனால் பீடிக்கப்பட்டுள்ள ஒருவரின் இருமலில் அல்லது வயிற்றோட்டத்தில் இரத்தம் கசியும் அல்லது சருமத்தில் புண்கள் காணப்படலாம். ஒரு பராமரிப்பாளராக நீங்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்.


1. அடிக்கடி உங்கள் கரங்களை சவர்க்காரமிட்டு கழுவ வேண்டும்.



2. உங்களிலோ அல்லது எயிட்ஸ் நோயாளியிலோ உள்ள புண்களை நீர் உட்புகாதபடி துணியால் மூடிக்கட்டவும்.



3. நோயாளியைக் குளிப்பாட்டும் போதோ அல்லது படுக்கை விரிப்புகளைக் கழுவும் போதோ பிளாஸ்டிக் பைகளை அல்லது கையுறைகளை அணிந்து கொள்ளவும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான
AIDS
நோயாளி
ஒருவரை
பராமரித்துக
கொள்வதாயின்...

4

படுக்கை விரிப்புக்கள் மற்றும் தரையைக கழுவுவதற்கு அரை வாளி நீருடன் ஒரு கோப்பை சலவைத்தூளை பயன்படுத்தவும்.



5

எயிட்ஸ் நோயுடன் வாழ்பவருக்கு ஆன்மீக ஆலோசனை வழங்கி அவர்களுடன் ஜெபிக்க மறக்க வேண்டாம். இது அவர்களுக்கு தமது நோய்க்கு முகம் கொடுக்கவும் மரணத்துக்குத் தம்மைத் தயார்படுத்திடவும் உதவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AIDS ஐக் கொண்டுள்ள உமது நண்பருக்கோ அல்லது அயலவருக்கோ உதவுவதற்கான வழிவகைகள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலுறவு மூலம் கடத்தப்படும் தொற்றுக்கள் (STI) அல்லது நோய்கள் (STD) வேறு

[பாலுறவு மூலம் கடத்தப்படும் தொற்று, (STI)பாலுறவின் மூலம் கடத்தப்படும் நோய்களுக்கு வழிவகுக்கும், (STD)]

HIV களும் உண்டா?

- உங்களுக்கு எஸ்.ரீ.டீ இருப்பின், நீங்கள் HIV/AIDS ஆல் பீடிக்கப்படுவதற்கு கூடிய சாத்தியம் உண்டு.

- நீங்கள் குழந்தைகளை உருவாக்க இயலாதபடிக்கு அவை உங்களது உடலைப் பாதிக்க கூடும்.

- பொதுவாகக் காணப்படும் எஸ்.ரீ.டீக்கள் சிறுநீர் வியாதிகள், கிரந்திப்புண், மேக நோய் குடல்நோய்கள், பெண்ணுறுப்பு வியாதிகள், தேமல் வியாதிகள், குஷ்டம் படர்தல், கல்லீரல் வீக்கம் போன்றவை.

- எஸ்.ரீ.டீ ஐப்பற்றி ஏதாவது அறிகுறிகள் தென்பட்டால் உடன் வைத்தியர் ஒருவரைச் சந்திக்கவோ அல்லது ஒரு சுகாதார நிலையத்துக்கோ காலதாமதமின்றிச் செல்லவும் (உங்கள் அந்தரங்க உறுப்புக்களில் அரிப்பு அல்லது வீக்கம் காணப்பட்டால் அல்லது அவைகளிலிருந்து அசாதாரன மணத்துடன் வெளியேற்றங்கள் வந்தால், காய்ச்சல் இருத்தல் அல்லது சிறுநீர் கழிக்கும்போது வேதனையாக இருத்தல்).

- விரைவாகவும் பூரணமாகவும் சிகிச்சை அளிக்கப்பட்டால் எஸ்.ரீ.டீக்களை கட்டுப்படுத்த முடியும்.

- பெண்களும் ஸ்திரிகளுமே எஸ்.ரீ.டீ இன் ஆபத்தை அதிகம் எதிர்நோக்குவதால் ஆரம்ப காலத்திலேயே சிகிச்சை அளிப்பது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆபிரிக்காவில் எயிட்ஸ் பற்றிய துணுக்குகள்



- உலகில்36 மில்லியன் பேர் HIV இனால் க்கப்பட்டுள்ளனர்.
- இலங்கையில் 8500 பேர் HIV இனால் பீடிக்கப்பட்டுள்ளனர்.
- உலகலே எச்.ஐ.வி இனால் பீடிக்கப்பட்டுள்ளவர்களுள் 2/3 பங்கினர் ஆபிரிக்காவில் உள்ளனர்.
- உலகலே HIV இனால் பீடிக்கப்பட்டுள்ளவர்களுள் 2/3பங்கினர் ஆபிரிக்காவில் உள்ளனர்.
- ஆபிரிக்காவின் 8 நாடுகளில் 15% க்கு அதிகமான குடிமக்கள் HIV இனால் பீடிக்கப்பட்டுள்ளனர்.
- ஆபிரிக்காவில் முன்னணி வகிக்கும் ஆட்கொள்ளி AIDS எயிட்ஸ் ஆகும்.
- தென் ஆபிரிக்காவிலே இன்று 15 வயதுடைய பெண்களுள் 1/3 பகுதியனர் மட்டுமே 35ஆவது பிறந்த நாளை தாண்டுவர் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- HIV இனால் பல சிறுவர்கள் அனாதைகள் ஆகியுள்ளனர்.
- விழிப்பாயிருங்கள்.

## கவனம்


"எனக்கு இது நேரிடாது" என இறுமாந்து இருக்க வேண்டாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மாகாண அடிப்படையில் எயிட்ஸினால் பாதிக்கப்பட்டவர்களின் விகிதாசாரம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் AIDS சமூகத்திலும் குடும்பத்திலும் ஏற்படும்பாதிப்புக்கள்.

AIDS
உள்ள
ஒருவருக்கு
சமூக ரீதியாக
என்ன
நிகழும்?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பழக்கவழக்கங்களை

நாம் இப்பொழுதே மாற்றியமைக்கவேண்டும்!

நாம்
என்ன
செய்ய
முடியும்?



எப்படி?

## 1 நல் வாழ்க்கை மதிப்பீடுகளைப் பின்பற்றுதல்.

எமது அடிவேருக்கு திரும்புவோம்..
(எதேச்சையான பாலுறவுகள் சமூதாயத்தைப் பாதிக்கின்றது)

எமது வாழ்வுக்கான வேத நியமங்களுக்குத் திரும்புவோம்.

பாலுறவு திருமண வாழ்விற்கு மட்டுமே! இதை திருமணத்திற்கான கடவுளின் "புவியீர்ப்பு விதி" எனலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாம்
என்ன செய்ய
முடியும்?

1 மாறுவதற்கு ஒரு திடமான உத்தேச எண்ணம்.



கடவுளின் பார்வையில் திருமணமானது உறுதியானதும் அழகியதும் விரும்பத்தக்கதுமான ஓர் விடயமாகும் இதற்கு எதிரானது வீணும் அழிவுமே.

2 ஒரே சிந்தையுள்ள குழுவினுடைய ஆதரவு.

தனித்து சாதிப்பது
கடினம்.

ஒருவர் ஒருவருக்கு
நாம் உதவிட
வேண்டும்.

சம வயதினரின்
செல்வாக்கு உறுதியாக
அமையலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் என்ன செய்ய முடியும்?

# கனிகள் பழுக்க முன்பு உண்ணக்கூடாது. இல்லையேல் அது உங்களை நோயாளியாக்கிவிடும்!



பாலுறவைக் கனியெனச் சிந்தியுங்கள், ஒருவருடன் பாலுறவு கொள்ளும் போது நீங்கள் கனியை உண்ணுகிறீர்கள். திருமணத்திற்கு வெளியே அந்தக் கனியைத சாப்பிட்டுவிட்டீர்களா?

நீங்கள் HIV இனால் பீடிக்கபட்டிருக்கலாம். கனியை உண்பதற்கு அதி சிறந்த வழி அது கனிந்த பின்னே.உண்பதாகும் அதாவது திருமண எல்லைக்குள்ளேயே அமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## AIDS இன் மூலம் மரணம் ஏற்பட காரணம்:

நான்
என்ன செய்ய
முடியும்?

### அறிவீனம்

“எனக்கு அது தெரியாது”

அல்லது

### அவநம்பிக்கை

“நான் அதை நம்பவில்லை”






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AIDS
இனைத்
தவிர்க்கச்
சிறந்த வழி.

AIDS இனைத் தவிர்க்க நாம் கூற வேண்டிய

சிறந்த வார்த்தை

# வேண்டாம்!

திருமணத்திற்கு முன்பு பாலுறவு வேண்டாம

திருமணத்திற்கு வெளியே பாலுறவு வேண்டாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## AIDS இனைத் தவிர்க்க நாம் கூற வேண்டிய சிறந்த வசனம்

AIDS
இனைத்
தவிர்க்க
சிறந்த வழி.

# ஆம்!



திருமணத்திற்கு முன்னான
ஆரோக்கியமான தோழமைக்கு ஆம்.
யாவருக்கும் நண்பர்கள்,
ஆனால் எவருக்கும்
காதலர்கள் அல்ல!

# ஆம்!

கடவுளின் திருமண ஏற்பாட்டின்படி ஒரு கணவன், ஒரு மனைவி. ஜீவிய காலம் முழுவதுக்குமே!



# ஆம்!



ஆம் எம் குழந்தைகள் வளர்வதற்கான திடகாத்திரமான ஒரு குடும்பத்தினை உருவாக்க ஆம்!

ஆம் வாழ்க்கை பற்றியான
கடவுளின்திட்டத்திற்கு ஆம்!



Printed at : New Ferrine Printers (Pvt) Ltd. Tel: 421227

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயிட்ஸ் அற்ற சந்ததி ஒன்று சாத்தியம் தான்!

ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை,
இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிஷேசக ஐக்கியத்துவ,
இல.113,
தெகிவளை
தொலைபேசி இல. 0115633200,
மின்னஞ்சல் முகவரி:
**projectpositive@adtlanka.org**

*transforming lives and communities*

Reproduced with kind permission of Scripture Union Africa

Alliance Development Trust

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org